# மன்ற நிகழ்விற்கான கூட்டப்பொருள்

**பொருள் எண்: 01**

வடலூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2025 நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்: 02**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் கீழ்காணும் விவரப்படியான ஏழு(7) தொடக்கப்பள்ளிகள் மற்றும் ஒரு(1) நடுநிலைப்பள்ளிகளை தற்போது குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம் அலுவலகம் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்த நிலையில் அவற்றை வடலூர் நகராட்சி கட்டுப்பாட்டில் ஒப்படைப்பு செய்ய வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), ஊராட்சி ஒன்றியம், குறிஞ்சிப்பாடி அவர்களின் கடித ந.க.எண்.அ3/1241/2023, நாள்.20.03.2025 கடிதத்தில் கீழ்காணும் பள்ளிகள், பள்ளிகளுக்கு சொந்தமான அடிப்படை கட்டமைப்புகளான பள்ளிக்கழிவறைகள், சமயலைறைக் கட்டிடங்கள், சுற்றுசுவர், குடிநீர் ஆதாரங்கள், மிதிவண்டி நிறுத்தம் கூடங்கள் உள்ளடக்கிய மொத்த இனங்களும், சொத்துகளும் இதனுடன் சேர்த்து வடலூர் நகராட்சி வசம் உள்ளது உள்ளபடி ஒப்படைப்பு செய்வதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பள்ளியின் விவரம் |
|---|---|
| 1. | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, பூசாலிக்குப்பம் |
| 2. | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, வடக்கு தெரு, ஆபத்தாரணபுரம். |
| 3. | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, பண்ருட்டி சாலை கிழக்கு. ஆபத்தாரணபுரம்,. |
| 4. | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, காட்டுக்கொல்லை. |
| 5. | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, புது நகர். |
| 6. | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, சேராக்குப்பம். |
| 7. | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, வெங்கட்டங்குப்பம். |
| 8. | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, இந்திரா நகர் (பார்வதிபுரம்) |

**அலுவலகக்குறிப்பு :-** மேற்கண்ட பள்ளிகள் வடலூர் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதை மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.535/2023/இ1.**

**பொருள் எண்: 03**

வடலூர் நகராட்சி ஊக்க நிதி (SFC Incentive Fund) 2023-24 திட்டத்தின் கீழ் வார்டு எண்.20, கடலூர் சாலை சந்தை எதிர்புறம் அங்கன்வாடி மையம் அருகில் மையத்தடுப்புச்சுவர் (Center median) மற்றும் வார்டு எண்.15, நெய்வேலி சாலை அரசு மகளிர் பள்ளி எதிர்புறம் மையத்தடுப்புச்சுவரில் (Center median) அமைக்கப்பட்டுள்ள ஆர்னமெண்டல் ஒளி உமிழ் விளக்குகள் மின் கம்பங்களுக்கு மும்முனை மின் இணைப்பு வழங்க வேண்டி இளமின் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், வடலூர் நகரம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு கனிணியில் பதிவேற்றம் செய்யப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி கட்டணம் செலுத்த வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை ரூ.39040/- நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | சந்தை எதிர்புறம் அங்கன்வாடி மையம் அருகில் மையத்தடுப்புச்சுவர் (Center median) பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 15 மின் கம்பங்கள். | 19520/- |
| 2. | நெய்வேலி சாலை அரசு மகளிர் பள்ளி எதிர்புறம் மையத்தடுப்புச்சுவரில் (Center median) பகுதியில் அமைக்கப்பட்டுள்ள | 19520/- |

| | | |
|---|---|---|
| | 20 மின்கம்பங்கள். | |
| | **மொத்தம்** | **39040/-** |

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண்.137/2022/இ1)**

**பொருள் எண்: 04**

வடலூர் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு 2025-2026ம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், பதிவேடுகள், படிவங்கள், தாள்கள், மூடுதாள்கள் போன்றவை வாங்கி வழங்குவதற்கு "தமிழ்நாடு மல்டி பர்பஸ் இண்டிகோ சர்வ்" திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்தில் வாங்குவதற்கும் அதற்கான செலவினம் ரூ.5.00 (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண்.416/2025/சி1**

**பொருள் எண்: 05**

நகராட்சி நிர்வாக இயக்குர், சென்னை அவர்களின் கடித எண்.34238/2017/அ2, நாள்.29.10.2024ல் தெரிவித்துள்ளதற்கிணங்க , வடலூர் நகராட்சியில் ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி தொகை 2022 - 2023 மற்றும் 2023 - 2024ஆம் ஆண்டு வரை உள்ள காலங்களுக்கு ரூ.3,34,100/- நிலுவை உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, இந்நகராட்சியின் வருமானtரி செலுத்தும் ஆலோசகர் (Consultant) மூலம் நடவடிக்கை சரி செய்தமைக்கு பட்டயக்கணக்கர் திரு.முத்துக்குமரன் அவர்கள் ரூ.30,000/-க்கான பட்டியல் தொகை வழங்க கோரி கடிதம் அனுப்பியுள்ளார். எனவே,மேற்கண்ட பணி முடித்தமைக்கு பட்டியல் தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண்.482/2023/பி1**

**பொருள் எண்: 06**

வடலூர் நகராட்சி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2023 - 2024 (KNMT) ன் கீழ் வார்டு எண்.20, சேராக்குப்பம் புல எண்.33, ல் புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகனமேடையின் கட்டிடத்தில் உள்ள மின் இணைப்பினை (Single Phase ) மும்முனை மின் இணைப்பாக (Three Phase) மாற்றம் செய்து தர மின்சார வாரியத்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் மேற்படி, முன்முனை மின் இணைப்புக்கான கட்டணம் ரூ.1,02,885/-செலுத்தக்கோரி ,இளமின் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் , வடலூர் நகரம் அவர்களால் 11.04.2025 நாளிட்ட பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி செலவினத்தொகை ரூ.1,02,885/—ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :—** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.67/2023/இ1)**

**பொருள் எண்: 07**

மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் மாவட்டம் அவர்களின் அறிவுரையில் கோடைக்காலம் 2025 வெயிலின் தாக்கம் அதிகம் ஏற்படக்கூடும் என்பதால் அதனை எதிர்கொள்ளும் பொருட்டு பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தண்ணீர் பந்தல் அமைக்கவும் மற்றும் நகராட்சி எல்லைக்குட்பட்ட அங்கன்வாடி மையங்களின் சமையல் அறை கூடத்திற்கு புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் பழுது, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.50 இலட்சத்தினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :—** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.424/2025/இ1)**

**பொருள் எண்: 08**

வீட்டு மனைப்பட்டா , சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டம் , வகைபாடு மாற்றம், கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பார்வதிபுரம் கிராமம் புல எண்.352/1 மற்றும் 350—ல் ஹெக்டேர் 0.01.02 பரப்பு ஊராட்சி ஒன்றிய சாலை மற்றும் வண்டிப்பாதை சர்க்கார் புறம்போக்கு வகைப்பாட்டில் சுமார் 0.01.02. ஹெக்டேர் பரப்பில் திரு.குணசேகரன் என்பவர் வீடுகட்டி சுமார் 05 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வரும் (01) ஒரு நபரின் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தும் சிறப்பு திட்டத்தின் கீழ் வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப்பட்டா வழங்க நகர்மன்ற தீர்மானம் மற்றும் ஆட்சேபனை இல்லையென தடையின்மை சான்று வழங்க வருவாய் வட்டாட்சியர் கடித ந.க.எண்.ஆ1/203/2025, நாள்.30.04.2025ல் வரப்பெற்ற கடிதப் பொருள் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :—** மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்**. 712/2025/**எப்**1)

**பொருள் எண்: 09**

வீட்டு மனைப்பட்டா, சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டம், வகைபாடு மாற்றம், கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், ஆபத்தாரணபுரம் கிராமம் புல எண்.138/2A,143 மற்றும் 144ல் விஸ்தீரணம் 0.39.00 ஹெக்டேர் ஊராட்சி சாலை வண்டிப்பாதை மற்றும் களம் புறம்போக்கு வகைப்பாட்டில் சுமார் 0.00.45 ஹெக்டேர் பரப்பில் வீடுகட்டி சுமார் (05) ஐந்தாண்டுக்கும் மேலாக வீடு கட்டி குடியிருந்து வரும் 01 நபர் திரு.விஸ்வநாதன் என்பவர் ஆக்கிரமிப்பினையும் மற்றும் புல எண்.138/20, 0.74.0 ஹெக்டேர் களம் புறம்போக்கு வகைப்பாட்டில் சுமார் 0.01.25 ஹெக்டேர் பரப்பில் வீடு கட்டி சுமார் (05) ஐந்தாண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வரும் 02 நபர்கள் 1.திரு.செல்வம் மற்றும் 2. ராமச்சந்திரன் என்பவர்களின் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தும் சிறப்பு திட்டத்தின் கீழ் வரன்முறைப்படுத்தி வீட்டு மனைப்பட்டா வழங்க நகர்மன்ற தீர்மானம் மற்றும் ஆட்சேபனை இல்லையென தடையின்மைச்சான்று வழங்க வருவாய் வட்டாட்சியர் கடித

ந.க.எண்.ஆ1/203/2025, நாள்.28.04.2025 வரப்பெற்ற கடிதப் பொருள் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்**. 694/2025/எப்1)

**பொருள் எண்: 10**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர் பார்வதிபுரம் கிராமம் புதுநகர் கிராமபுல எண்.141/1 மற்றும் 141/2ல் 1872 ச.அடி மனைக்கு திரு.கோவிந்தன் த/பெ வேணுகோபால் என்பவர் பார்வதிபுரம் மற்றும் திருமதி. வெண்ணிலா க/பெ தில்லைமுத்து என்பவர் முன்னாள் படைவீரர் துறை மூலம் புல எண்.141/7 மற்றும் 141/8–ல் 0.1744 ச.அடி மனைக்கு பட்டா வழங்க கோரி மனு கொடுத்துள்ளதிற்கு மேற்படி, புல எண் புதிய சர்வே எண்.446/4 ஆனது கிராமநத்தம் அடங்களில் சர்க்கார் புறம் போக்கு எனவும் பட்டாதாரர் கலத்தில் காலி பம்பு செட் என கிராம கணக்கில் பதிவு கெய்யப்பட்டுள்ளதை திருத்தம் செய்து மனுதாரர்களின் பெயருக்கு பட்டா வழுங்குவது தொடர்பாக வடலூர் நகர்மன்றத்தில் பொருள் வைத்து தீர்மானம் இயற்றி தீர்மான நகலுடன் தடையின்மை சான்றினையும் தங்களது கருத்துரையையுடன் அறிக்கையாக அனுப்பி வைக்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர் கடித ந.க.எண். வி8/1749953/2024,நாள்.12.03.2025–ல் கோரியதற்கு இட ஆய்வு செய்ததில் பேரூராட்சியாக இருக்கும் பொழுது கட்டிட அனுமதி பெற்று கட்டிடம் கட்டி தற்சமயம் நகராட்சி மூலம் வரிநிர்ணயம் செய்து வரித்தொகையினை செலுத்தி வருகின்றனர் மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைந்துள்ளது என்ற விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மற்றும் மேற்படி நபர்களுக்கு பட்டா வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்**380/2025/எப்1)

**பொருள் எண்: 11**

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), ஊராட்சி ஒன்றியம், குறிஞ்சிப்பாடி அவர்களின் கடித ந.க.எண்.அ3/1241/2023, நாள்.20.03.2025 கடிதத்தில் வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு பள்ளிகள் நகராட்சி வசம் உள்ளது உள்ளபடி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வதிபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் தமிழ்நாடு அரசின் சார்பாக மாணவ / மாணவியர்களுக்கு Hi Tech Lab அமைக்க இருப்பதாகவும் அதற்கான பணிகள் நடைபெற்று வரும் நிலையில் பள்ளியில் உள்ள மின் இணைப்பினை (Single Phase) மும்முனை மின் இணைப்பாக (Three Phase) மாற்றம் செய்ய தமிழ்நாடு மின்சார வாரியத்துறைக்கு Online மூலம் பதிவு செய்து பதிவு செய்த விண்ணப்பத்தினை இணைத்து தலைமை ஆசிரியர் , நகராட்சி நடுநிலைப்பள்ளி, பார்வதிபுரம், அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து, மேற்படி, மும்முனை மின் இணைப்புக்கான கட்டணம் ரூ.4130/–,நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண்.535/2023/இ1)**

**பொருள் எண்: 12**

வடலூர் நகராட்சி, I&A திட்ட நிதியின் கீழ் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையம் முடிவுறும் தருவாயில் உள்ளது. இதில், தரை தளத்தில் 50 கடைகள், ஒரு உணவகம், மூன்று பயணிகள் அமரும் இடம், தாய்மார்கள் பாலூட்டும் அறை , மூன்று பொருட்கள் பாதுகாப்பு அறை, நேரகாப்பாளர் அறை, ஆண், பெண் கழிப்பறை மற்றும் முதல் தளத்தில் 60 கடைகள், ஆண், பெண் கழிப்பறை ஆகிய வசதிகள் வரவுள்ளது. எனவே, பேருந்து நிலைய கட்டிட பயன்பாட்டிற்காக 110 கடைகளுக்கு தனித்தனியாக மின்மீட்டர், ஒரு உணவகத்திற்கு மின்மீட்டர், மூன்று பயணிகள் அமரும் இடத்திற்கு மின்மீட்டர், தாய்மார்கள் பாலூட்டும் அறைக்கு மின்மீட்டர் , மூன்று பொருட்கள் பாதுகாப்பு அறைக்கு மின்மீட்டர், நேரகாப்பாளர் அறைக்கு மின்மீட்டர், ஆண், பெண் கழிப்பறைக்கு மின்மீட்டர் பொருத்த ஏதுவாக ஒருங்கிணைந்த பேனல் போர்டுகள் (Bus bar type panel Boards) 8 எண்ணிக்கைக்கள் மற்றும் மின் வயர்கள் (UG cable) போன்ற பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.20.00 இலட்சம் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2023 – 2024 மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.137/2023/இ1)**

**பொருள் எண்: 13**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, புது நகர் நகராட்சி துவக்கப்பள்ளி 1998–1999 ம் ஆண்டு கட்டப்பட்டு சுமார் 26 ஆண்டுகள் கடந்த நிலையில் பள்ளிகளின் கட்டிடத்தின் மேற்கூரை பெயர்ந்தும், சுவர்கள் சேதமடைந்து உறுதியற்ற நிலையில் உள்ளதாலும், மேலும், மழைக்காலங்களில் மழைநீர் வகுப்பறைக்குள் நுழைவதாலும் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு அக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக கட்டி தருமாறு தலைமை ஆசிரியர், நகராட்சி துவக்கப்பள்ளி, புதுநகர்,அவர்களின் கடிதம் நாள்.04.04.2025–ல் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி, பள்ளியினை இடித்து அப்புறப்படுத்தி அவ்விடத்தில் பள்ளி மேம்பாட்டு மானியம் (SFC – School Improvement Grant –Capital Works) 2025 – 2026 திட்டத்தின் கீழ் நான்கு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்ட உள்ளதால் மாணவ / மாணவியரின் பாதுகாப்பு நலன் கருதி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண். 535/2025/இ1)**

**பொருள் எண்: 14**

வடலூர் நகராட்சி 19.93 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் 27 வார்டுகளை உள்ளடக்கிய இந்நகராட்சியில் I & A திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி KNMT மற்றும் NSMT சாலை பணிகள் SFC Incentive Fund நிதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் 6th CFC நிதியின் கீழ் OHT கட்டும் பணி 15th CFC நிதியின் கீழ் OHT கட்டும்பணி, பள்ளி மேம்பாட்டு மானியம் மற்றும் மாநில நிதிக்குழு நிதி (SFC) – நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் (URDF) நிதியின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி, பணிகளை கண்காணிக்கவும் மற்றும் புதிய

திட்டப்பணிகளுக்கு கருத்துரு (DPR) தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு மண்டல அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னை மற்றும் TUFIDCO அலுவலகம் சென்னை சென்ற உரிய அனுமதி பெருதல், அன்றாடம் கேட்கப்படும் தரவுகள் அனுப்புதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இரண்டாம் நிலை நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணி அமைப்பின்படி ஒரு வரைவாளர் மற்றும் இரண்டு பணி ஆய்வர் பணியிடங்கள் காலியாக உள்ளதால் மேற்படி பணிகளை உரிய காலத்தில் செய்ய சிரமம் ஏற்படுகிறது. எனவே, மூன்று தொழில்நுட்ப உதவியாளர்கள் வெளிகொணர்வு முகமை மூலம் 3 மாத காலத்திற்கு பணி அமர்த்தும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.60 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.671/2025/இ1.**

**பொருள் எண்: 15**

வடலூர் நகராட்சி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2024–2025–ன் கீழ் வார்டு எண்.20, அய்யன் ஏரி தூர்வாரி சிமெண்ட் கல் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அப்பகுதியில் அமைந்துள்ள செல்லியம்மன் கோயில் தெரு, குடியிருப்பு பகுதி மற்றும் வாரச்சந்தை நடைபெறும் இடங்களில் மழைக்காலங்களில் தேங்கியுள்ள மழைநீர் அய்யன் ஏரிக்கு செல்ல ஏதுவாக RCC குழாய் பதித்து தருமாறு அப்பகுதி பொதுமக்களால் கோரப்பட்டதை தொடர்ந்து நகர் மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் அறிவுறுத்தலின்படி மேற்காணும், பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 672/2025/இ1.**

**பொருள் எண்: 16**

வடலூர் நகராட்சி மாவட்ட ஆட்சியர், அலுவலகத்தில் நடைபெற்ற நுகர்வோர் பாதுகாப்பு குழு கூட்டத்தில் வடலூர் நுகர்வோர் உரிமை & சுற்றுச்சூழல் பாதுகாப்பு பேரவையின் சார்பாக நகராட்சிக்குட்பட்ட தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள வேகத்தடைகளினால் பள்ளிக்குச்செல்லும் மாணவ / மாணவியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இரவு நேரங்களில் வேகத்தடை இருக்கும் இடம் தெரியவில்லை. இதனால், அதிகளவில் விபத்து ஏற்படுகிறது. எனவே, வேகத்தடைகளை இரவு நேரங்களில் கண்டறியும் வண்ணம், வண்ணம் தீட்டியோ அல்லது ஒளிரும் ஒளிர்ப்பான்களையோ அமைத்து தருமாறு கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மேற்படி, பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.50,000/– (ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.620/2025/இ1.**

**பொருள் எண்: 17**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, தலைமை ஆசிரியர், நகராட்சி துவக்கப்பள்ளி, புது நகர் அவர்களின் கடிதத்தில், மேற்படி, பள்ளி 1998–1999 ம் ஆண்டு கட்டப்பட்டு சுமார் 26 ஆண்டுகள் கடந்த நிலையில் பள்ளிகளின் கட்டிடத்தின் மேற்கூரை பெயர்ந்தும், சுவர்கள் சேதமடைந்து உறுதியற்ற நிலையில் உள்ளதாலும், மேலும், மழைக்காலங்களில் மழைநீர் வகுப்பறைக்குள் நுழைவதாலும் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு அக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக கட்டி தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி, பள்ளியின் வடக்கு பக்கத்தில் உள்ள இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் மற்றும் தெற்கு பக்கத்தில் உள்ள இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் முற்றிலுமாக சிதலமடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால் இக்கட்டிடங்களை ஆய்வு செய்து கட்டிட உரித்தன்மை சான்று (Stablity Certificate) வழங்குமாறு முனைவர், அண்ணா பல்கலைக்கழகம், பனிக்கன்குப்பம், பண்ருட்டி அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.535/2025/இ1, நாள்.04.04.2025ல் கடிதம் அனுப்பப்பட்டதில் 29.04.2025–ல் கள ஆய்வு செய்யப்பட்டதில் கட்டிடம் உறுதியற்ற தன்மையில் உள்ளதால் இடித்து அப்புறப்படுத்தலாம் என சான்று (Stablity Certificate) வழங்கியுள்ளனர். அதற்கான, கட்டணத்தொகை ரூ.21240/– செலுத்துமாறு Invoice No.2811/Panruti/CIVIL/ 2526C9491, Dtaed.29.04.2025 பட்டியல் சமர்ப்பித்துள்ளனர். மேற்படி, தொகை ரூ.21240/– நகராட்சி வருவாய் நிதியில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண். 535/2025/இ1)**

**பொருள் எண்: 18**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எ.ண்.9732/2025/SS2, நாள்.02.05.2025ல் பள்ளி மேம்பாட்டு நிதி – மூலதனப் பணிகள் (SFC – School Improvement Grant – Capital Works ) 2025–2026 திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழே குறிப்பிட்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை இலட்சத்தில்** |
|---|---|---|
| 1 | வார்டு எண்.26, RC காலனி – 2, (33617080527) பகுதியில் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி | 16.80 |
| 2 | வார்டு எண்.3, ஆபத்தாரணபுரம் சின்ன காலனி (33617080501) பகுதியில் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி | 16.80 |
| 3 | வார்டு எண்.2, ஆபத்தாரணபுரம் (33617080502) பகுதியில் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி | 16.80 |
| | **மொத்தம்** | **50.40** |

மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதையடுத்து. குழந்தைகள் பாதுகாப்பு நலன் கருதி புதிய அங்கன்வாடி கட்டும் பணியில் சிதலமடைந்துள்ள பழைய அங்கன்வாடி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.759 /2025/இ1.**

**பொருள் எண்: 19**

வடலூர் நகராட்சி வார்டு எண்.02, ஆபத்தாரணபுரம் திருவள்ளுவர் நகர் 5வது தெரு சாலையின் நடுவே உள்ள மின்கம்பத்தினால் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது மற்றும் வாகனங்கள் செல்லும் போது விபத்துக்கள் தொடர்ந்து நடைபெறுவதால் மேற்படி சாலையின் நடுவே

உள்ள மின்கம்பத்தினை மேற்குபுறம் சாலையின் ஓரமாக அமைக்குமாறு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்க கடிதம் வைக்கப்பட்டதில் அதற்கான கட்டணம் ரூ.18,520/- செலுத்துமாறு இளமின் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் வடலூர் நகரம் அவர்களின் கடித ந.க.எண்.AE/JE/O&M/1VADALUR/2025-26, நாள்.14.05.2025 கடிதத்தின் மூலமாக பட்டியல் சமர்ப்பித்துள்ளதை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 748/2025/இ1)**

**பொருள் எண்: 20**

தமிழ்நாடு ஆரம்ப கல்வி சட்டம் 1920 பிரிவு34ல் அரசின் முன் அனுமதியுடன் நகர மன்றங்கள் சொத்துவரியுடன் கல்வி வரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் விகிதத்தினை பிரிவு 35(1) ல் சொத்துக்களின் ஆண்டு மதிப்பில் 5% விழுக்காட்டிற்கும் மிகாமல் விதிப்பு செய்ய வரையறை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் 1998 (திருத்தம்) 2022ல் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளில் 13.04.2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பிரிவு 80ல் நகர்மன்றங்கள் கல்வி வரிவிதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் 1998 (திருத்தம்) 2022ல் நகரமன்றங்கள் கல்வி வரிவிதிக்கத்தினை பிரிவு 81ன்படி வரிவிதிப்பு செய்ய தீர்மானம் செய்த பின்பு வரிவிதிப்பு செய்யப்படவுள்ள விவரத்தினை உரிய நடைமுறைகளை பின்பற்றி பொதுமக்களுக்கு விளம்பரம் செய்து அதன் மீதான ஆலோசனைகள் / முறையீடு குறிப்பிட்ட நாட்களுக்குள் பெற்று அதனை நகர்மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைத்து இறுதி முடிவின் மீது அரசாணை பெற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வடலூர் நகராட்சியில் கீழ்காணும் விகிதப்படி சொத்துவரி இனம் வாரியாக தலைப்பு வாரியாக திருத்தம் செய்யப்பட்ட சதவீதத்தின் அடிப்படையில் இனிவரும் காலங்களில் செயல்படுத்திட வேண்டி மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | தலைப்பு வாரியாக விவரம் | ஏற்கனவே உள்ள சதவீதம் | தற்போது திருத்தம் செய்யப்பட வேண்டிய சதவீதம் |
|---|---|---|---|
| 1. | பொது நிதி (ஆண்டு வாடகை மதிப்பீட்டில்) | 7% | 8% |
| 2. | குடிநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு நிதி (ஆண்டு வாடகை மதிப்பீட்டில்) | 3% | 3% |
| 3. | கல்வி நிதி (ஆண்டு வாடகை மதிப்பீட்டில்) | 0% | 2.5% |
| 4. | நூலக வரி ஆண்டு வாடகை மதிப்பீட்டில் 1.15% அடிப்படை வரிதொகையில் 10%) | 1.15% | 1.15% |

**அலுவலக குறிப்பு :-** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1998 (திருத்தம்) 2022, பிரிவு 81ன்படி மேற்படி வரியினை விதிப்பு செய்யப்படவுள்ள விபரத்தினை உரிய நடைமுறைகளை பின்பற்றி விளம்பரம் செய்து அதன் மீதான பொதுமக்களின் ஆலோசனைகள் / முறையீடுகளை 15 நாட்கள் கால அவகாசம் வழங்கி பின் இறுதி முடிவு செய்யலாம்.

(கோப்பு எண். /2025/எ1)

பொருள் எண்: 21

வடலூர் நகராட்சியில் வார்டு எண்.19–ல் புதிய பேருந்து நிலைய கட்டிட கடைகளை முன் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி விடுவது தொடர்பானதாகும். பேருந்து நிலைய கடைகளை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி விடுவதற்கான கடைகளுக்கான வாடகை நிர்ணயம் செய்யவதற்காக நகராட்சி பொறியாளர் மற்றும் வருவாய் ஆய்வர் குறிப்பு கோரப்பட்டது. இந்நகராட்சி பொறியியல் பிரிவு அலுவலர் குறிப்பில் மேற்படி RCC கடைகளுக்கு முன் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விடுவதற்கு ஏதுவாக கட்டுமான மதிப்பு மற்றும் பொதுப்பணி துறை விலை விகிதத்தின்படி வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விபரம்.

**Ground Floor - Restaurant 8.23 X 6.23m**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Restaurant | **Restaurant** | | |
| 2 | Type of Building. | RCC Structure | | |
| 3 | Year of Construction | **2025** | | |
| 4 | Age of the Building. | 0 | | |
| 5 | Plinth Area of Building. | **8.69** | **6.69** | |
| 6 | Plinth Area Rate ( 2024-2025)- E1 | **15825** Per Sq.M | | |
| 7 | Land Value (2024-2025) | **1000.00** Per Sq.Feet | | |
| 8 | Deprecation cost | 0 | | |
| **BUILDING COST** | | | | |
| | **Description** | **Length in M** | **Breath in M** | **Area in Sq.M** |
| | Area of the Building | 8.69 | 6.69 | 58.14 |
| | | **Area in Sq.M** | **Rate Per Sq.M** | **Building Cost** |
| | Plinth Area Rate. | 58.14 | 15825 | 920003.78 |
| | 7.5% for Electrical works | | | 69000.28 |
| | 7.5% for Water supply works | | | 69000.28 |
| | 7.5% for Sanitary works | | | 69000.28 |
| | | | | 1127004.63 |
| | GST 18% | | | 202860.83 |
| | LWF 1% | | | 11270.05 |
| | | | **Total Cost** | **1341135.51** |
| | | **Rate of Depriciation 1% 34 Years** | **Total Cost of Building** | **Amount** |
| | Deprecation cost | 0 | 1341135.51 | 0.00 |
| | | | **Net Value of Building** | **1341135.51** |
| **LAND COST** | | | | |
| | Building Area | 58.14 | Sq.M | 625.54 Sq.Feet |
| | | | **Total Land Area** | **625.54 Sq.Feet** |
| | | **Land Area per Sq.Feet** | **Government Land Cost per Sq.Feet** | **Total Land Cost** |
| | Land Cost | 625.54 | 1000.00 | **625544.44** |
| **TOTAL COST** | | | | |
| | Building Cost | 1341135.51 | | |
| | Land Cost | 625544.44 | | |
| | **Total Cost** | **1966679.95** | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Monthly Rent for Shop | 1966679.95 /12x16/100 | 26222.40 | Say | 26300.00 |

## Ground Floor - Shop 3.00 X 4.00m

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Shop No | **1 to 50** | | |
| 2 | Type of Building. | RCC Structure | | |
| 3 | Year of Construction | **2025** | | |
| 4 | Age of the Building. | 0 | | |
| 5 | Plinth Area of Building. | **3.46** | **4.46** | |
| 6 | Plinth Area Rate ( 2024-2025)-E1 | **15825** Per Sq.M | | |
| 7 | Land Value (2024-2025) | **1000.00** Per Sq.Feet | | |
| 8 | Deprecation cost | 0 | | |
| **BUILDING COST** | | | | |
| | **Description** | **Length in M** | **Breath in M** | **Area in Sq.M** |
| | Area of the Building | 3.46 | 4.46 | 15.43 |
| | | **Area in Sq.M** | **Rate Per Sq.M** | **Building Cost** |
| | Plinth Area Rate. | 15.43 | 15825 | 244205.07 |
| | 7.5% for Electrical works | | | 18315.38 |
| | 7.5% for Water supply works | | | 18315.38 |
| | 7.5% for Sanitary works | | | 18315.38 |
| | | | | 299151.21 |
| | GST 18% | | | 53847.22 |
| | LWF 1% | | | 2991.51 |
| | | | **Total Cost** | **355989.94** |
| | | **Rate of Depriciation 1% 34 Years** | **Total Cost of Building** | **Amount** |
| | Deprecation cost | 0 | 355989.94 | 0.00 |
| | | | **Net Value of Building** | **355989.94** |
| **LAND COST** | | | | |
| | Building Area | 15.43 Sq.M | 166.04 Sq.Feet | |
| | | **Total Land Area** | **166.04 Sq.Feet** | |
| | | **Land Area per Sq.Feet** | **Government Land Cost per Sq.Feet** | **Total Land Cost** |
| | Land Cost | 166.04 | 1000.00 | **166044.02** |
| **TOTAL COST** | | | | |
| | Building Cost | 355989.94 | | |
| | Land Cost | 166044.02 | | |
| | **Total Cost** | **522033.96** | | |
| | **Monthly Rent for Shop** | 522033.96 /12x16/100 | **6960.45** | **Say** **7000.00** |

## First floor - Shop 3.00 X 4.00m

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Shop No | **51 to 110** | | |
| 2 | Type of Building. | RCC Structure | | |
| 3 | Year of Construction | **2025** | | |
| 4 | Age of the Building. | 0 | | |
| 5 | Plinth Area of Building. | **3.46** | **4.46** | |
| 6 | Plinth Area Rate ( 2024-2025) **E2 RCC framed Strucrure** | **11060** Per Sq.M | | |
| 7 | Land Value (2024-2025) | **1000.00** Per Sq.Feet | | |
| 8 | Deprecation cost | 0 | | |
| **BUILDING COST** | | | | |
| | **Description** | **Length in M** | **Breath in M** | **Area in Sq.M** |
| | Area of the Building | 3.46 | 4.46 | 15.43 |
| | | **Area in Sq.M** | **Rate Per Sq.M** | **Building Cost** |
| | Plinth Area Rate. | 15.43 | 11060 | 170673.50 |
| | 7.5% for Electrical works | | | 12800.51 |
| | 7.5% for Water supply works | | | 12800.51 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7.5% for Sanitary works | | | | 12800.51 |
| | | | | 209075.03 |
| GST 18% | | | | 37633.51 |
| LWF 1% | | | | 2090.75 |
| | | | **Total Cost** | **248799.29** |
| | **Rate of Depriciation 1% 34 Years** | **Total Cost of Building** | | **Amount** |
| Deprecation cost | 0 | 248799.29 | | 0.00 |
| | | | **Net Value of Building** | **248799.29** |
| **LAND COST** | | | | |
| Building Area | 15.43 | Sq.M | | 166.04 Sq.Feet |
| | | **Total Land Area** | | **166.04 Sq.Feet** |
| | **Land Area per Sq.Feet** | **Government Land Cost per Sq.Feet** | | **Total Land Cost** |
| Land Cost | 166.04 | 1000.00 | | **166044.02** |
| **TOTAL COST** | | | | |
| Building Cost | 248799.29 | | | |
| Land Cost | 166044.02 | | | |
| **Total Cost** | **414843.30** | | | |
| **Monthly Rent for Shop** | 414843.30 /12x16/100 | **5531.24** | **Say** | **5600.00** |

- 625.54 சதுரடி உள்ள (RCC) Restaurant கடை 1, சதுரடிக்கு ரூ.42/-
- 166.04 சதுரடி உள்ள (RCC) தரை தளம் 50 கடைகளுக்கு 1 சதுரடிக்கு ரூ.42/-
- 166.04 சதுரடி உள்ள (RCC) முதல் தளம் 60 கடைகளுக்கு 1 சதுரடிக்கு ரூ.33.7/- வீதம் வாடகை நிர்ணயம் செய்திடலாம் என பரிந்துரைத்துள்ளார்.

**இந்நகராட்சி வருவாய் பிரிவு அலுவலர் அவர்களின் குறிப்பில் கீழ்கண்ட விவரங்கள் சமர்ப்பித்துள்ளார்**

வடக்கு குறுக்கு ரோட்டில் உள்ள தனியார் கடைகளின் வாகையினை ஆய்வு செய்ததில் கீழ்காணும் விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

| வ.எண். | ஆய்வு செய்த கடையின் பெயர் | அளவு | தற்போதைய வாடகை மதிப்பு | வாடகை மதிப்பின் படியான சதுர அடி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1. | அரிசி மண்டி கடை (தரை தளம் மற்றும் முதல் தளம்) | 600 | 25000/- | 42 |
| 2. | அரிசி மண்டி கடை (தரை தளம்) | 600 | 1500/- | 25 |
| 3. | பேக்கரி | 384 | 20000/- | 52 |
| 4. | மொபைல்ஸ் | 320 | 20000/- | 63 |

**இந்நகராட்சி பொறியியல் பிரிவு அலுவலர் மற்றும் வெளிபுற சந்தையின் நடைமுறையில் உள்ள வாடகை ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு**

| வ. எண். | கடைகளின் விவரம் மற்றும் அளவு | நகராட்சி பொறியியல் பிரிவு பரிந்துரையின்படி நிர்ணயம் செய்யப்படக்கூடிய வாடகை விவரம் சதுர | தனியார் கடைகளின் வாடகை விவரம் சதுர அடிக்கு ரூ. |
|---|---|---|---|

| | | அடிக்கு ரூ. | |
|---|---|---|---|
| 1. | 625.54 சதுரடி உள்ள (RCC) Restaurant கடை 1, சதுரடிக்கு | 42/- | 63/- |
| 2. | 166.04 சதுரடி உள்ள (RCC) தரை தளம் 50 கடைகளுக்கு 1 சதுரடிக்கு | 42/- | 52/- |
| 3. | 166.04 சதுரடி உள்ள (RCC) முதல் தளம் 60 கடைகளுக்கு 1 சதுரடிக்கு | 33.7/- | 42/- |

மேற்கண்ட பட்டியலில் பொறியியல் பிரிவு கட்டுமான மதிப்பு , பொதுப்பணித்துறை விலை விகிதத்தின்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை, நகராட்சி தற்போதைய கடைகளுக்கான வாடகை, தனியார் கடைகளுக்கான வாடகை (Market Value) மற்றும் வருவாய் பிரிவு அவர்களின் பரிந்துரைக்கப்பட்டுள்ள வாடகை இதன் அடிப்படையில் தற்போது கட்டுமான பணிகள் நடைபெற்று வரும் புதிய பேருந்து நிலைய கடை வாடகை மற்றும் வைப்புத்தொகையை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யலாம்.

| வ. எ ண் | கடை விவரம் | மொத்த கடை | அளவு | நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட செய்யப்படக்கூடிய கடைகளின் வாடகை ரூ. (ஒரு மாதம்) | கடை ஒன்றுக்கு செலுத்த வேண்டிய டேவணித் தொகை (கேட்பு வரைவோலையாக (DD) மட்டும்) |
|---|---|---|---|---|---|
| 1. | உணவகம் (Restaurant) | 1 | 625.54 சதுரடி | 26,300/- | 15,00,000/- |
| 2. | பேருந்து நிலையம் வெளிபுற கடைகள் கீழ்தளம் (பண்ருட்டி மெயின் ரோடு) | 14 (Shop no. 1 to 13 and 27) | 166.04 சதுரடி | 9,000/- | 10,00,000/- |
| 3. | பேருந்து நிலையம் வெளிபுற கடைகள் மேல் | 16 (Shop no. 51 to 65 | 166.04 சதுரடி | 7,500/- | 5,00,000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தளம் (பண்ருட்டி மெயின் ரோடு) | and 81) | | | |
| 4. | பேருந்து நிலையம் உட்புற கடைகள் கீழ் தளம் | 36 (Shop no. 14 to 26 and 28 to 50) | 166.04 சதுரடி | 7,000/- | 7,00,000/- |
| 5. | பேருந்து நிலையம் உட்புற மேல்தள கடைகள் | 44 (Shop no.66 to 80 மற்றும் 82 to 110) | 166.04 சதுரடி | 5,600/- | 4,00,000/- |

மேற்கண்டவாறு உணவகம், பேருந்து நிலைய தரைதளம் மற்றும் முதல் தளத்திற்கான கடைகளின் வாடகை மற்றும் வைப்புத்தொகை நிர்ணயம் செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் பெறப்படும் வைப்புதொகையில் ரூ.2.00 கோடியை புதிய பேருந்து நிலைய கட்டுமானப்பணிக்கு ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.170/2025/அ1**

**பொருள் எண்: 22**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 27 வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளின் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்றம் செய்து பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், வார்டு எண்.01 முதல் 14 வரை உள்ள OHT மின்மோட்டார்கள் மற்றும் நேரடி நீர் உந்து மின்மோட்டார்களில் அவ்வப்போது பழுதுகள் ஏற்படுவதால் பொதுமக்களின் நலன் கருதி சீரான குடிநீர் விநியோகம் வழங்க ஏதுவாக பழுதாகும் OHT மின்மோட்டார்கள் மற்றும் நேரடி நீர் உந்து மின்மோட்டார்களில் காயில் ரீவைண்டிங் செய்தல், ஸ்டார்டர் மற்றும் பேனல் போர்டு போன்ற பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.95 இலட்சம் செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப் :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு. எண். 893/2025/இ1**

**பொருள் எண்: 23**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 27 வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளின் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்றம் செய்து பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், வார்டு எண்.15 முதல் 27 வரை உள்ள OHT மின்மோட்டார்கள் மற்றும் நேரடி நீர் உந்து மின்மோட்டார்களில் அவ்வப்போது பழுதுகள் ஏற்படுவதால் பொதுமக்களின் நலன் கருதி சீரான குடிநீர் விநியோகம் வழங்க ஏதுவாக பழுதாகும் OHT மின்மோட்டார்கள் மற்றும் நேரடி நீர் உந்து மின்மோட்டார்களில் காயில் ரீவைண்டிங் செய்தல், ஸ்டார்டர் மற்றும் பேனல் போர்டு போன்ற பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு. எண்.895 /2025/இ1**

**பொருள் எண்: 24**

இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் குடிநீர் பகிர்மான குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.அவ்வாறு குடிநீர் விநியோகம் செய்யும் காலங்களில் 26 மேல்நிலை மற்றும் 1 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகளுக்கு உந்து குழாய்கள் மற்றும் வீடுகளுக்கு செல்லும் பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் அடைப்பு மற்றும் உடைப்புகளினால் குடிநீர் விநியோகம் தடைபடும் சூழ்நிலை உருவாகிறது. எனவே, 01 முதல் 14 வார்டுகளின் பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க ஏதுவாக குடிநீர் குழாய்களில்

ஏற்படும் அடைப்புகள் மற்றும் உடைப்புகளை சரிசெய்யவும் குடிநீர் பராமரிப்பு பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக்குறி** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு. எண்.894/2025/இ1**

**பொருள் எண்: 25**

இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் குடிநீர் பகிர்மான குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.அவ்வாறு குடிநீர் விநியோகம் செய்யும் காலங்களில் 26 மேல்நிலை மற்றும் 1 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகளுக்கு உந்து குழாய்கள் மற்றும் வீடுகளுக்கு செல்லும் பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் அடைப்பு மற்றும் உடைப்புகளினால் குடிநீர் விநியோகம் தடைபடும் சூழ்நிலை உருவாகிறது. எனவே, 15 முதல் 27 வார்டுகளின் பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க ஏதுவாக குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் உடைப்புகளை சரிசெய்யவும் குடிநீர் பராமரிப்பு பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு .4.00 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக்குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு. எண்.896/2025/இ1**

**பொருள் எண்: 26**

வடலூர் நகராட்சி மூன்று தொழில்நுட்ப உதவியாளர்கள் வெளிகொணர்வு முகமை மூலம் 6 மாத காலத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, பணிகாலம் முடிவுறும் நிலையில் உள்ளதால் எதிர்வரும் 30.05.2025 அன்று நடைபெறவுள்ள நகர்மன்ற கூட்டத்தில் அனுமதி பெற மன்றப்பொருள் தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இரண்டு மாதத்திற்கான ஊதியம் வழங்க ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.541, நாள்.19.08.2024 ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் மூலமாகவே அதே விலை விகிதத்தில் இரண்டு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள ஆணையர் ஒப்புதலுக்கு.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.4463/2025/இ1)**

**பொருள் எண்: 27**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்திவரும் அனைத்து பிரிவுகளிலும் உள்ள கணினி மற்றும் பிரிண்டர்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை Software மற்றும் Hardware உடன் சரிசெய்ய இயலாமல் உள்ளது. மேலும், இந்நகராட்சியில் கணினி திட்ட நிகழ்வாளர் பணியிடம் இல்லாததால் கணினி சம்மந்தமான பழுதுகளை நீக்கம் செய்திட இயலவில்லை என்பதால் இந்நகராட்சிக்கு கணினி பழுதுபார்ப்பு வருடாந்திட பராமரிப்பு பணி (AMC) மேற்கொள்ளவும் மற்றும் பிரிண்டர்களுக்கான டோனர்கள் வாங்கி வழங்கவும் போன்ற பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.903/2025/இ1)**

**பொருள் எண்: 28**

வடலூர் நகராட்சிக்கு சொந்தமான இடிக்கப்பட்ட பழைய பேருந்து நிலையத்தில் இயங்கி வந்த வரியில்லா இனங்களான கடை வாடகையினை செலுத்தாத குத்தகைதாரர்களிடம் இருந்து நிலுவையில் உள்ள தொகையினை வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்படி வசூலிக்கப்பட்டு வருகையில் கடை எண்.40–க்கான குத்தகைதாரர் திரு.எஸ். தனசேகரன் என்பவர் இந்நகராட்சி செலுத்தவேண்டிய வாடகை 2021–2022 ஆண்டியின் ஏப்ரல் மாதம் தொகை ரூ.61,360/– ( GST தொகை சேர்த்து) நிலுவையில் இருப்பதாக கணினி கேட்பில் காண்பிக்கப்பட்டு வருகிறது. மேற்படி தொகையானது குத்தகைதாரர் திரு. எஸ். தனசேகரன் அவர்கள் 10.08.2022 ஆம் தேதி ( ரசீது எண்.182/VM1/1/22–23/00000213 ) இந்நகராட்சி கருவூலத்தில் தொகையாக ரூ.61,360/– செலுத்தி ரசீது பெற்றுள்ளார். எனவே, மேற்படி தொகை வசூல் செய்ய முடியாத தொகை என்பதால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் –1998 விதி 117 யின் படி மேற்படி தொகையினை தள்ளுபடி செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 170/2025/அ1**

**பொருள் எண்: 29**

வடலூர் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் JCB வாகனம் TN–31CF 2873 க்கு டயனடெக் JCB கம்பெனி நிறுவத்தின் மெக்கானிக் வாகனத்தை ஆய்வு செய்ததில் சிறு, சிறு பழுதுகள் நீக்கம் செய்ய வேண்டியுள்ளதாகவும், தேவையான உதிரி பாகங்களை மாற்ற வேண்டியுள்ளதால் மற்றும் லேபர் சார்ஜ் சேர்த்து தொகை ரூ.72357/– ஆகும் என்றும் அதற்கான தொகையை வழங்கிய பின்னரே JCB வாகனத்தை சரிசெய்ய இயலும் என கோரியதால் நகராட்சி பணிக்கு JCB வாகனம் மிகவும் அத்தியாவசமானதால் உடனடியாக சரிசெய்ய டயனடெக் நிறுவனத்திற்கு தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.பொதுசுகாதார நலன் கருதி மேற்கண்ட செலவினத்தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.913/2025/எச்1)**

**பொருள் எண்: 30**

பேருந்து நிலைய கட்டிட பயன்பாட்டிற்காக 110 கடைகளுக்கு தனித்தனியாக மின்மீட்டர்கள், ஒரு உணவகத்திற்கு மின்மீட்டர், மூன்று பயணிகள் அமரும் இடத்திற்கு மின்மீட்டர், தாய்மார்கள் பாலூட்டும் அறைக்கு மின்மிட்டர் , மூன்று பொருட்கள் பாதுகாப்பு அறைக்கு மின்மீட்டர், நேரகாப்பாளர் அறைக்கு மின்மீட்டர், ஆண், பெண் கழிப்பறைக்கு மின்மீட்டர் பொருத்த ஏதுவாக ஒருங்கிணைந்த பேனல் போர்டுகள் (Bus bar type panel Boards) 8 எண்ணிக்கைக்காக மின் வயர்கள் (UG cable) போன்ற பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.20.00/– இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள 07.03.2025 அன்று நகர்மன்ற தலைவர் முன் அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 28.03.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S சாய் சக்தி & கோ, சேலம். | (–)0.03 % குறைவு |
| 2 | M/S PPS & கோ, சேலம் | (+) 0.54 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.03% குறைவாக கொடுத்துள்ள M/S சாய் சக்தி & கோ, சேலம், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.417/2025/இ1)**

**பொருள் எண்: 31**

இந்நகராட்சியில் 01 முதல் 27 வார்டுகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் நேரடி நீருந்து நிலையங்களில் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணியில் மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய ஒரு மின்னாளர் மற்றும் மின் கம்பி உதவியாளர் 6 மாத காலத்திற்கு வெளிகொணர்வு முகமை பணியாளர்களை அமர்த்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00/– இலட்சம் செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.522, நாள்.17.03.2025 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 02.04.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் | (–)0.28 % குறைவு |
| 2 | T.ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், ஆணையம்பேட்டை | (+) 3.77 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.28% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.417/2025/இ1)**

**பொருள் எண்: 32**

இந்நகராட்சியில் 01 முதல் 27 வார்டுகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் நேரடி நீருந்து நிலையங்களில் இயக்குதல் மற்றும் பராமப்பு பணிகளை 3 மாதகாலத்திற்கு மேற்கொள்ள வெளிகொணர்வு முகமை பணியாளர்களை அமர்த்தும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுரூ.7.70/– இலட்சம் செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 523, நாள். 17.03.2025 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 28.03.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் | (–)0.21 % குறைவு |
| 2 | T.ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், ஆணையம்பேட்டை | (+)1.28 % அதிகம் |

அலுவலகக்குறிப்பு :- மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.21% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.417/2025/இ1)**

**பொருள் எண்: 33**

நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் 2025–2026 திட்டத்தின் கீழ் ரூ.280.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் மறுசீரமைக்கும் பணிக்கு CPSMC 18th கூட்டம் நாள். 02.04.2025ல் நிர்வாக அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 28.04.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S ஸ்ரீ செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன், முதனை. | (+) 0.45 % அதிகம் |
| 2 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர். | (–) 0.01 % குறைவு |

அலுவலகக்குறிப்பு :- மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.01% குறைவாக கொடுத்துள்ள M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர்.அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 569/2025/இ1)**

**பொருள் எண்: 34**

நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் 2025–2026 திட்டத்தின் கீழ் ரூ.186.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் மறுசீரமைக்கும் பணிக்கு CPSMC 18th கூட்ட நாள்.02.04.2025ல் நிர்வாக அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 28.04.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S ஸ்ரீ செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன், முதனை. | (+) 0.01 % அதிகம் |
| 2 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர். | (–) 0.01 % குறைவு |

அலுவலகக்குறிப்பு :- மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.01% குறைவாக கொடுத்துள்ள M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர்.அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 569/2025/இ1)**

**பொருள் எண்: 35**

மாநில நிதிக்குழு நிதி (SFC) 2025–2026 திட்டத்தின் கீழ் ரூ.56.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்கு CPSMC 18th கூட்ட நாள். 02.04.2025ல் நிர்வாக அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 28.04.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S ஸ்ரீ செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன், முதனை. | (–) 0.02 % குறைவு |
| 2 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர். | (+) 0.06 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.02% குறைவாக கொடுத்துள்ள M/S ஸ்ரீ செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன், முதனை. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 570/2025/இ1)**

**பொருள் எண்: 36**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2025–2026 திட்டத்தின் கீழ் ரூ.163.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய தார் சாலைகள் அமைக்கும் பணிக்கு CPSMC 18th கூட்ட நாள். 02.04.2025ல் நிர்வாக அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 28.04.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S ஸ்ரீ செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன், முதனை. | (–) 0.03 % குறைவு |
| 2 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர். | (+) 0.22 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.03% குறைவாக கொடுத்துள்ள M/S ஸ்ரீ செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன், முதனை. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 424/2025/இ1)**

**பொருள் எண்: 37**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2025–2026 திட்டத்தின் கீழ் ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.05, சர்வே எண்.75/14, 76/3, மற்றும் 76/4 தம்புசாமி நகரில் பூங்கா அமைக்கும் பணிக்கு CPSMC 19th கூட்ட நாள். 09.04.2025ல் நிர்வாக அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 10.05.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திருமதி.S.கிரிஜா, ஒப்பந்ததாரர், பண்ருட்டி. | (–) 0.13 % குறைவு |
| 2 | M/S SP கன்ட்ரக்ஷன், பண்ருட்டி | (+) 2. 27% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.13% குறைவாக கொடுத்துள்ள திருமதி.S.கிரிஜா, ஒப்பந்ததாரர், பண்ருட்டி. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 598/2025/இ1)**

**பொருள் எண்: 38**

(SFC – School Improvement Grant – Capital Works) 2025–2026 திட்டத்தின் கீழ் ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, புதுநகர் ஆரம்பப்பள்ளிக்கு நான்கு வகுப்பறைகள் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.9732/2025/SS2, நாள்.15.04.2025–ல் நிர்வாக அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 07.05.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S சம்பத்குமார், கன்ஸ்ட்ரக்ஷன், விழுப்புரம். | (–) 0.03 % குறைவு |
| 2 | M/S பாத்திமா இன்ஜினியரிங் கம்பனி, விழுப்புரம். | (+)1. 48% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.03% குறைவாக கொடுத்துள்ள M/S சம்பத்குமார், கன்ஸ்ட்ரக்ஷன், விழுப்புரம், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 625/2025/இ1)**

**பொருள் எண்:39**

(SFC – School Improvement Grant – Capital Works) 2025–2026 திட்டத்தின் கீழ் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01, பூசாலிக்குப்பம் ஆரம்பப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறைகள் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.9732/2025/SS2, நாள்.15.04.2025–ல் நிர்வாக அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 07.05.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S சம்பத்குமார், கன்ஸ்ட்ரக்ஷன், விழுப்புரம். | (–) 0.05 % குறைவு |
| 2 | M/S பாத்திமா இன்ஜினியரிங் கம்பனி, விழுப்புரம். | (+)1.18% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.05% குறைவாக கொடுத்துள்ள M/S சம்பத்குமார், கன்ஸ்ட்ரக்ஷன், விழுப்புரம், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 625/2025/இ1)**

**பொருள் எண்: 40**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20, செல்லியம்மன் கோயில் தெரு குடியிருப்பு பகுதி மற்றும வாரச்சந்தை நடைபெறும் இடங்களில் மழைக்காலங்களில் தேங்கும் மழைநீரினை அய்யன் ஏரிக்கு செல்ல ஏதுவாக நான்கு இடங்களில் RCC பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி அளிக்கட்ட நாள். 25.04.2025 தொடர்ந்து 15.05.2025ல்

ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | S.Rex ஒப்பந்ததாரர், தூத்துக்குடி. | (+)0.20% அதிகம் |
| 2 | IJ கன்ஸ்ட்ரக்ஷன், தூத்துக்குடி | (−) 0.30 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−) 0.13% குறைவாக கொடுத்துள்ள IJ கன்ஸ்ட்ரக்ஷன், தூத்துக்குடி, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.672/2025/இ1)**

**பொருள் எண்: 41**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தண்ணீர் பந்தல் அமைக்கவும் மற்றும் நகராட்சி எல்லைக்குட்பட்ட அங்கன்வாடி மையங்களின் சமையல் அறை கூடத்திற்கு புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் பழுது, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி அளிக்கட்ட நாள். 08.04.2025 தொடர்ந்து 15.05.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர் | (−)0.13 % குறைவு |
| 2 | திரு.வி.பாஸ்கரன், வடலூர். | (+) 4.87 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−) 0.13% குறைவாக கொடுத்துள்ள M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.424/2025/இ1)**

**பொருள் எண்:42**

இந்நகராட்சிக்குட்பட்ட தெருக்களில் சாலைகளின் நடுவே உள்ள வேகத்தடைகளை இரவு நேரங்களில் கண்டறிய வண்ணம் தீட்டுதல் மற்றும ஒளிரும் ஒளிர்ப்பான்களை அமைக்கும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.50,000/– செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி அளிக்கட்ட நாள். 25.04.2025 தொடர்ந்து 15.05.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர் | (−)0.21 % குறைவு |
| 2 | திரு.வி.பாஸ்கரன், வடலூர். | (+) 2.08 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−) 0.21% குறைவாக கொடுத்துள்ள M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.626/2025/இ1)**

**நகர்மன்ற தலைவர்,**

**வடலூர் நகராட்சி**

**வடலூர் நகராட்சி**

**மன்றக் கூட்ட அழைப்பிதழ்**

*************

2025 ம் ஆண்டு மே மாதம் 30.05.2025. வெள்ளிக்கிழமை காலை 12.30 மணிக்கு நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெறும். அதற்கான மன்றபொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வமயம் தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நகர்மன்ற தலைவர்,**

**வடலூர் நகராட்சி.**